# வெள்ளிவிழா காலப்பெட்டகம் திறக்கப்பட்டது!

பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELA NADU

மலர் 19 மார்கழி 6 முஹறம் 9 இதழ் 311
யாழ்ப்பாணம் புதன்கிழமை 21-12-77

SUNSHINE SOAP

இது ஓர் லாலா தயாரிப்பு
சலவை சோப்
எந்தக்கடைகளிலும் வாங்கிக்கொள்ளலாம்

லாலா சோப்
தொழிற்சாலை
அச்சுவேலி

ஈழத்தமிழர் பிரச்னை:

# அரபுநாடுகள் உதவி செய்யவேண்டும்

## எகிப்திய தூதரிடம் அமிர்தலிங்கம் கோரிக்கை

(கொழும்பு)

**ஈழத்தமிழரின் சுயநிர்ணய உரிமைப்போராட்டத்தில் அரபுநாடுகள் எமக்கு உதவி செய்யவேண்டும் என்று தமிழர் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம், எகிப்தியத் தூதுவரை நேற்றுக்கேட்டுக்கொண்டார்.**

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர்களில் ஒருவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று இலங்கையிலுள்ள எகிப்திய தூதுவரை சந்தித்துப் பேசினார்.

இலங்கையிலுள்ள தமிழர்களின் நிலையை எகிப்திய தூதுவருக்கு அவர் எடுத்துக்கூறியதுடன், தமிழ்மக்களின் பிரச்னைகள் தீர்த்துவைக்க உதவ வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

நேற்று முன்தினம் பிரிட்டனிலிருந்து வந்துள்ள பாராளுமன்றக் குழுவினரை திரு. அமிர்தலிங்கம் சந்தித்துப் பேசினார்.

இலங்கைத் தமிழர்களின் இன்றைய நிலைக்கு பிரிட்டிஷாரே காரணமென்றும் இலங்கைக்கு விடுதலை வழங்கிய போதே தமிழர்களின் சுயநிர்ணய உரிமையையும் வழங்கியிருக்க வேண்டும் என்றும் பிரிட்டிஷ் குழுவினரிடம் தெரிவித்த திரு. அமிர்தலிங்கம் இலங்கைத் தமிழர்களின் பிரச்னைகளைத் தீர்த்துவைக்க உதவ வேண்டும் என்றும் வலியுறுத்தினர். (ம)

## பேரவையில் சிந்தியவை

**ஆனந்த திஸநாயக்கா:** [ஸ்ரீ ல. சு. க.] முன்னைய அரசைக் குறைகூறும் காணி, விவசாய அமைச்சர் தனது மகனை அபிவிருத்திச் சபையொன்றின் மனேஜராகவும், மனைவியை அந்தரங்கக் காரியதரிசியாகவும் வைத்திருக்கின்றாரே இது என்ன நியாயம்?

**விவசாய அமைச்சர்:** திரு பீலிக்ஸூம் அப்படித்தான் வைத்திருந்தார், எனது அந்தரங்கக் காரியதரிசியாக எனது மனைவிதான் இருக்கின்றார் வேறு எவரது மனைவியையும் நான் வைத்திருக்கவில்லை,

**ஆனந்ததிஸநாயக்கா:** அரிசி இறக்குமதியைக் குறைத்து வெங்காய இறக்குமதியை அரசாங்கம் அதிகரித்திருக்கிறது வெங்காயத்தில் சக்தி இருக்கிறது.

**சபாநாயகர்:** அது என்ன சக்தி?

**ஆனந்த திஸநாயக்கா:** ஆட்களை சும்மா இருக்கவிடாது

**சபாநாயகர்:** நல்ல வயலாகப் பார்த்துச் செய்யவேண்

(6-ம் பக்கம் பார்க்க)

## சபை முன்னர் வைக்கப்படும்

புதுடில்லி டிச. 20

டில்லி செங்கோட்டையில் புதைக்கப்பட்டிருந்த சுதந்திர வெள்ளிவிழா காலப்பெட்டகம் இன்று பிற்பகல் இங்கு திறக்கப்பட்டது

காலப்பெட்டகம் திறக்கப்பட்டபோது; இவ்விவகாரம் சம்பந்தமாகத் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றக் கமிட்டி அங்கத்தவர்களும் கல்வி அமைச்சரும் மற்றும் சில மாநில அமைச்சர்களும் கூட இருந்தனர்.

இக்காலப்பெட்டகம் 1972ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி செங்கோட்டையில் அப்போது பிரதமராக இருந்த திருமதி இந்திராகாந்தியின் பணிப்பின்மீது) புதைக்கப்பட்டது 1947ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் திகதிக்கும் 1972ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தின் வரலாறு இக்காலப்பெட்டகத்தில் இருப்பதாகவும், இதில் உள்ள விஷயங்கள் சர்ச்சைக்குரியனவாக உள்ளனவென்றும் காலப்பெட்டகம் தோண்டப்படவேண்டும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் சிலர் குரல் எழுப்பியதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

### பெட்டகத்தில்...

இக்காலப் பெட்டகத்தைத் தோண்டும் வேலைகள் கடந்த மாதம் 28ம் திகதி ஆரம்பிக்கப்பட்டு இம்மாதம் 8ம் திகதி வெளியே எடுக்கப்பட்டு இன்று திறக்கப்பட்டது. இதிலுள்ள தஸ்தாவேஜுகள் ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் உள்ளன. காலப்பெட்டகத்தில் இரண்டு பிலிம் சுருள்கள், பலருடைய குரல்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்ட நாடாக்கள், பதின்மூன்று புகைப்படங்கள், சிறிய துப்பாக்கி வகைகள், தபால் தலைகள், 10 ரூபா முதல் 50 சதம் வரையிலான நாணயங்கள் உட்பட பல பொருள்கள் இருந்தன. தஸ்தாவேஜுகளில் உள்ள விபரங்கள் இனிமேல்தான் தெரியவரும் என்றும் லோகசபையில் இவை வைக்கப்பட்டு 'பரிசிலனை' நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## அண்டவெளியில் சஞ்சரித்தார்

மாஸ்கோ டிச.20

சோவியத் விண்வெளிக்கப்பலில் இப்போது வலம்வந்து கொண்டிருக்கும் இரண்டுவீரர்களில் ஒருவர் இன்று அண்டவெளியில் சிலமணிநேரம் சஞ்சரித்தார் என்று மாஸ்கோ வானொலி இறிவித்தது.

இம்மாதம் 10ம் திகதி விண்வெளிக்கப்பல் அனுப்பப்பட்டது.

திருநெல்வேலி விவசாயப்பண்ணை

# உற்பத்திப்பிரிவு மீண்டும் ஆரம்பிக்கப்படும்!

(கொழும்பு)

திருநெல்வேலி அரசினர் விவசாயப் பண்ணையில் மூடப்பட்ட உற்பத்திப் பிரிவு மீண்டும் ஆரம்பிக்கப்படும்.

நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரத்திற்குகாணி விவசாய அமைச்சர் திரு ஈ. எல். சேனநாயக்கா இந்த உறுதிமொழியை வழங்கினர்.

"திருநெல்வேலி விவசாயப் பண்ணையில் இரண்டு பிரிவுகள் உண்டு ஒன்று போதனை பகுதி மற்றையது உற்பத்திப் பிரிவு இப்பிரிவில் கோழி வளர்ப்பு. நாற்று நடுகை, ஒட்டு மாங்கன்று வளர்ப்பு போன்றவை நடைபெற்றன. இப்பிரிவு மூடப்படலாகாதென கடந்த அரசுகாலத்தில் காங்கேசன் துறை உறுப்பினர் திரு. எஸ். ஜே வி. செல்வநாயகம் கேட்டபோது அப்போதைய அமைச்சர் அப்பிரிவு மூடப்படமாட்டாது என உறுதியளித்தார். ஆனல் முன்னைய அரசு இதனை மூடிவிட்டது. இதனுல் விவசாயிகள் தமக்கு வேண்டிய நாற்றுக்கள், ஒட்டுமாங்கன்றுகள் போன்றவற்றுக்கு கிளிநொச்சிக்குப் போகவேண்டியிருக்கின்றது இதனுல் இப்பிரிவை மீண்டும் திறக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும்" என்று நல்லூர் எம். பி. கேட்டுக்கொண்டார்.

காணி விவசாய அமைச்சின் நிதிஒதுக்கீட்டின் குழுநிலை ஆய்வில்போது திரு. சிவசிதம்பரம் பேசினர்

இதற்கு அமைச்சர் பதில் அளிக்கும்போது நாட்டில் ஐந்து இடங்களில் இப்படியான உற்பத்திப் பிரிவுகள் மூடப்பட்டுள்ளன. அவைகள் மீண்டும திறக்கப்படும் என்று உறுதியளித்தார்.

### மிளகாய்க்கு உத்தரவாத விலை

காணிவிவசாய அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின்மீது திரு சிவசிதம்பரம் தொடர்ந்து பேசும்போது, மிளகாய்க்கு உத்தர

[6ம் பக்கம் பார்க்க]

## மட்டக்களப்பு 2வது எம்.பி.யின் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மட்டக்களப்புத் தொகுதியில் தமிழர் ஒருவரும் முஸ்லிம் ஒருவரும் தெரிவுசெய்யப்படும் வகையிலேயே அத்தொகுதி வகுக்கப்பட்டுள்ளது. ஆனல் அங்கு முஸ்லிம் ஒருவர் தெரிவு செய்யப்படுவதை முறியடிக்கும்விதத்தில் இந்திய வம்சாவழியினருக்கு பங்கீட்டுப்புத்தகங்கள் வழங்கப்படுவதாக மட்டக்களப்பு எம். பி. ஜனப் மீராலெப்பை நேற்று தேசிய அரசுப் பேரவையில் குற்றஞ்சாட்டினர். தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் வேறு ஒரு அதிகாரியும் இதனைச் செய்து வருவதாகவும் கடந்த வாரம் 800 பேருக்கு இப்படி கூப்பன்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். [ம]

# 3 ஆண்டுகளில ரூ.7 கோடி நஷ்டம்

## ஜனவசம குறித்து கமிஷன் விசாரிக்கும்

[கொழும்பு]

ஜனவசம குறித்து விசாரணை செய்ய நடத்த விரைவில் கமிஷன் நியமிக்கப்படும் என்று காணி விவசாய அமைச்சர் திரு ஈ. எல் சேனநாயக்கா நேற்று தேசிய அரசுப் பேரவையில் அறிவித்தார்

ஜனவசம திட்டத்தின்கீழ் சேயிலோன் ரப்பர், தென்னைக்கு 68,000 ஏக்கர் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் ஜனவசம; திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் புதல்வி சந்திரிக்கா தலைமையில் இருந்தது என்றும் கூறிய காணி, விவசாய அமைச்சர்;

1974, 75, 76-ம் ஆண்டுக் காலப்பகுதியில் மொத்தம் ஏழு கோடி 20 லட்சம் ரூபா நஷ்டம் அரசுக்கு ஏற்பட்டதென்றும் 1977-ல் மட்டும் 7 மாதககாலத்தில்) 90 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டதென்

[6ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## தேவை

இரண்டு சில்லு உழவு யந்திரம் குபெட்டா அல்லது யன்மா தேவை முழு விபரத்துடன் அறிவிக்கவும். ஜீவாஸ்டோஸ், அளவெட்டி. 7973

அரசாங்கத்தினரால் அங்கீகரிக்கப்பட்ட உடை தயாரிக்கும் நிலையம் ஒன்றிற்கு நவநாகரீக முறையில் துணி வகைகள் வெட்டுவதற்கும் தைப்பதற்கும் ஆண் பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அத்துடன் மனேஜரும் தேவை. அனுபவமுள்ளோர் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். ரூபதிரன் காமன்ஸ், மே/பா சதாஸ் கிறீம்ஸ்கவுஸ், சாவகச்சேரி 7967

கண்ணுடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ளவர்களும் வேலை பழகுபவர்களும் (Trainees) உடனடியாகத் தேவை. வேலை பழகுபவர்களுக்கு ஜனவரி மாதத்திலிருந்து நாளொன்றிற்கு ரூபா 6/- வரையில் சம்பளமாகக் கொடுக்கப்படும். நீர்வேலிக்கு கிட்டடியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. தேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ், நீர்வேலி. 7790

பப்படத் தொழிலில் அனுபவமுள்ள இருவர் வேலைக்கு உடனே தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். தயாபரன், முருகாஸ்டோர்ஸ், வங்களாவடி, வேலணை. 7978

## விற்பனைக்கு

வூல்ஸ்லி சீனியர் 2'' (Wolsley senior) நீர் இறைக்கும் இயந்திரம்- புத்தம் புதியது. விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: விளம்பர இல. 7970, C/o ஈழநாடு, லிமிட்டெட், யாழ்ப்பாணம். 7970

வாழ்க்கையில் முன்னேறத் துடிக்கும் ஒவ்வொருவரும் வைத்திருக்கவேண்டியது எண் சோதிடம். விலை: இரண்டு ரூபா. ஆ. சிவராசா, மக்கள் வங்கி, பளை. 7976

## விற்பனைக்கு

சுதுமலை அம்மன் கோவிலுக்கு மேற்கு ஒழுங்கையில் வடக்குப் பக்கமாக 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு பஸ் பாதை, தேவாலயத்திற்குச் சமீபமாகவுள்ளது. தொடர்பு: க. பரராஜசிங்கம், 93/21 இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர் மடம், யாழ்ப்பாணம். 7975

## வாடகைக்கு

கொக்குவிலில் மின்சார நீர் வசதியுடன், 2 அறையுடன் வீட்டின் ஒரு பகுதி வாடகைக்குண்டு விபரங்களுக்கு: இல 15, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு. 7968

## ஊர்காவற்றுறைத் தொகுதி காப்புறுதி அமைப்பாளர்



ஊர்காவற்றுறைத் தொகுதிக்கு திரு. ச. சண்முகராசா காப்புறுதி அமைப்பாளராக (Insurance Orgaganezer) இலங்கை காப்புறுதிக் கூட்டுஸ்தாபனத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். திரு. ஆர். எஸ். தர்மரெத்தினம், காலமானதையொட்டி இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது. 7959

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோடு

வழக்கு இல. M. B. 12900

10, அம்மன்வீதி, யாழ்ப்பாணம்.

1. டாக்டர் வீரவாகு கதிரவேலுப்பிள்ளை பரமநாயகம். காலஞ்சென்றவர்

வாதி

2. பரமநாயகம் ஸ்ரீகாந்தா காலஞ்சென்றவர்

பதில்வாதி

1. ஸ்ரீகாந்தா குமரேசன்
2. ஸ்ரீகாந்தா பிரமளாஷாளினி
3. ஸ்ரீகாந்தா மைதிலி வான்மதி

பதில்வாதிகள்

எதிராக

120/3. அரசடி றோட்டு, கந்தர்மடம், யாழ்ப்பாணம். — சின்னையா நடராசா சண்முகநாதன்

பிரதிவாதி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 12900-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைக்க கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1978-ம் ஆண்டு தை மாதம் 10-ந் திகதி (10-1-78) செவ்வாய்க்கிழமை காலை 10 30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

ரூபா 17,517/-ம், 28-12-1971 தொடக்கம் 21-11-1972 வரைக்கும் ரூபா 13,000/-க்கு 12 வீத வட்டியும், அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் முற்றாக இறுபடும்வரைக்கும் 5 வீத வட்டியும் வழக்குச்செலவு ரூபா 585-40 சதமும்.

### காணிவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கும் பகுதியும், வண்ணார்பண்ணை கோவிற்பற்று,வண்ணார்பண்ணை வட கிழக்கு இறை ''சொட்டி தாழ்வு'' நி.ப 6 குளி 13½ம் கிணறும் பயிர்களும் கல்வீடும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு கந்தையா பெண் சரஸ்வதிக்கும் தர்மராசா பெண் கனகம்மாவுக்கு முரிய ஆதனம், மேற்கு கந்தையா கனகரத்தினத்துக்கும் பெண் அன்னம்மாவுக்குமுரிய ஆதனம், தெற்கு கருணாநிதி பெண் அன்னபூரணத்தினுதனம் இடங்கலும்.

செ. மாண்டித்துரை,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

மல்லாகம்,
24-11-77 7974

## வெள்ளைப்பூடு உற்பத்தி அதிகரிக்கும்

(கொழும்பு)

உள்ளூர்தேவையைப்பூர்த்தி செய்யும் வகையில் வெள்ளைப்பூடு உற்பத்தி அதிகரிக்கப்படவிருக்கிறது.

தற்போது வருடாந்தம் 30 லட்சம் ரூபா செலவில் 2000 தொன் வெள்ளைப்பூடு இறக்குமதி செய்யப்படுகிறது.

பதுளை முதலான இடங்களில் 3000ஏக்கரில் வெள்ளைப்பூடு உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மலையகத்திலேயே இவ்வுற்பத்தி கூடுதலாக உற்பத்தியாகிறது. (உ

## பிஸ்கால் விற்பனை

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

1. கந்தையா தில்லைநாதரும்
2. பெண் சிவஞானமும், இருவரும் காரைநகர்.

வழக்காளிகள்

வழக்கு இலக்கம் காசு: 102

எதிராக

தி. விக்னேஸ்வரன் கைம்பெண் சரோஜினி தேவி, காரைநகர் வடக்கு காரைநகர் இளர் காலஞ்சென்ற திருச்சிற்றம்பலம் விக்னேஸ்வரனின் ஆதனங்களுக்கு தத்துவகாரியாக தத்துவ வழக்கு இலக்கம் பி. ஒ. 153ல் நியமிக்கப்பட்டவர்.

எதிராளி

மேற்சொல்லப்பட்ட எதிராளியிடமிருந்து வெளியாகத்தில் விபரிக்கப்பட்ட தொகைப் பணம்ரூபா8,000/-க்கு1977-ம் ஆண்டு பங்குனி மாதம் 28-ந் திகதி தொடக்கம் தீர்வைத் திகதியாகிய 1977-ம் ஆண்டு ஆனி மாதம் 8-ந் திகதி வரைக்குமான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 10%ம் அதன் தீர்வைத் திகதியிலிருந்து முழுத்தொகையும் செலுத்தும் வரைக்கும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9% வட்டியும் மேலும் செலவு ரூபா 530-51 சதமும் பிஸ்கால் செலவும் பவுண்டேச்சும் அறவாக்குவதற்காக கீழே விபரிக்கப்படும் ஆதனத்தின் சகல உரித்துக்களையும் 1978-ம் ஆண்டு தை மாதம் 11-ந் திகதி புதன்கிழமை காலை 10-00 மணிக்கு சொல்லப்பட்ட ஆதனத்தில் இருந்து பகிரங்க ஏலத்தில் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற பிஸ்காலால் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைதீவு வடக்கிலுள்ள 'எருக்லம் காடும் ஆயினியும்'' நிலப்பரப்பு 15 குளி 4 இதில் கிழக்குப் பக்கமாக அறுதி கொடுத்த நிலப்பரப்பு 2 குளி 4 நீக்கி மிகுதி நிலப்பரப்பு 13 பதின்மூன்று பனைகள் தென்னைகளும் இதற்கு எல்லை கிழக்கு கணேசன் பெண் பரமேஸ்வரியினுதனமும், சிவஞானஞேதய வித்தியாசாலையினுதனமும், வடக்கு கதிரமலை பெண் சவுந்திரத்துக்கும் கசின்னையா ஆறுமுகத்துக்குரிய வாதனங்கள், மேற்கு றோட்டும் செல்லையா மாணிக்கவாசகத்தினுதனமும், தெற்கு ஒழுங்கையும் சிவஞானஞேதய வித்தியாசாலையினுதனமும், செல்லையா மாணிக்கவாசகத்தினுதனமும் ஒழுங்கையும் இதடங்கலும்.

முற்பதிவு லி. 433/48

மு. பத்மநாதன்,
பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்,
13-12-77. 7977

## 'வரியிறுப்பாளர் தேவைகளை கூடியளவு நிறைவேற்றியுள்ளேன்'

— யாழ். விசேஷ ஆணையாளர்

[யாழ்ப்பாணம்]

''வரியிறுப்பாளரின் தேவைகளை நான் கூடியளவு பூர்த்தி செய்துள்ளேன் தொடர்ந்து வரியிறுப்பாளர்களுக்குப் பாகுபாடின்றிச் சேவை செய்வேன்''

வண்ணை கோவில் உபமின் நிலையத்தைத் திறந்துவைத்த யாழ் விசேஷ ஆணையாளர் திரு. கே. சிவஞானம் மேற்கண்டவாறு கூறினர்.

சபை ஊழியர் திரு. ரி. எஸ். லோகநாதன் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

காமாட்சி அம்பாள் ஆலயத்திலிருந்து விசேட ஆணையாளர் திரு. கே. சிவஞானம், மின் பொறியியலாளர், சுகாதார வைத்திய அதிகாரி, அரசறின பொறியியலாளர் ஆகியோர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

மின்சாரசபைப் பொறியியலாளர் திரு. சிறிஸ்கந்தராசா, மின் பொறியியலாளர் திரு. ஆனந்தமூர்த்தி, திரு. கே. எஸ். திரவியம், திரு. தாமோதரம்பிள்ளை, திரு. வீரசிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்கள்.

## யாழ்ப்பாண மாநகர டசி மன்றம்

# கேள்வி அறிவித்தல்

[மீள அழைத்தல்]

துவிச்சக்கரவண்டி பாதுகாப்புநிலையம், கடை அறை ஆகியவற்றிற்கான குத்தகை - 1978

01-01-1978-ம் திகதி தொடக்கம் 31-12 1978ஆம் திகதி வரையிலான காலத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படுபவற்றிற்கு கேள்விகள் யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 30-12-77ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.29-12-77ஆம் திகதி வியாழக்கிழமை பி. ப. 3-00 மணிவரையும் அதற்குரிய பணத்தைச் செலுத்திய தன் பேரில் கேள்விப் பத்திரங்களை மாநகரசபைக் கணக்காளரிடமிருந்து பெறறுக் கொள்ளலாம்.

1. இன்னக்கடை துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம்.
2. பண்ணை மீன் சந்தை கடை அறை.
3. பொதுசன நூல் நிலைய துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் மாநகராட்சி மன்ற அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

க. சிவஞானம்,
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

மாநகராட்சி மன்ற அலுவலகம்
யாழ்ப்பாணம்.
19-12-77. 7979

## 'உடம் பெடுத்தால் மட்டும் பிறவியாகாது'

[யாழ்ப்பாணம்]

மனிதன் என்ற சொல்லுக்கே நினைப்பவன் என்பது பொருளாகும் அவன் சிந்திப்பவன், நினைத்தற்குரியதையே மனிதன் நினைக்க வேண்டும்' என்று நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் திருவெம்பாவை முன்னிட்டு பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா நடத்தி வரும் தொடர் விரிவுரையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும்கூறியதாவது:

'உணவு, உறக்கம், அணி, மணி, ஆடல், பாடல் இவற்றில் மனதைப் பறிகொடுக்காது கடைத்தேறும் வழிக்கு நினைக்க வேண்டியதை நினைப்பவன் தான் மனிதன்

உடம்பு பிறந்தாலே மட்டும் அது பிறவியாகி விடாது. பிறந்ததன் பயன், பிரானடி சேர்தலே. மற்றுப்பற்றெனக்கின்றி, நின் திருப்பாதமே மனம் பாவித்தேன். பெற்றலும் பிறந்தேன், இனிப் பிறவாத தன்மை வந்தெய்தினேன்' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறினர். ஆகவே மனிதர்களாகப் பிறந்த நாம் எந்த நிலையில் நின்றாலும், உண்மை மனிதன் பெறத்தக்க நிலையைப் பெறவேண்டும், அதற்கே முயலவேண்டும்.' (அ)

## 'நடிகன்'

[யாழ்ப்பாணம்]

கலைத்துறை வளர்ச்சியை குறிப்பாக நாடகக் கலையையும் நடிப்பையும் வளர்க்கும் முக்கிய நோக்காகக் கொண்டு 'நடிகன்' என்ற பெயரில் ஒரு மாசிகை வெளிவரவிருப்பதாக நாடகக் கலைஞர் ஒருவர் தெரிவித்தார். எழுத்தாளரும் நடிகருமான திரு. விஜயேந்திரன் இதனை நடத்துவாராம். திரு. விஜயேந்திரன் நடிப்புத்துறையில் 'நவரச மன்னன்' என்ற பட்டத்தைப் பெற்றிருக்கிறர் [அ]

## இன்று நடக்கும் உதைபந்தாட்டம்

[யாழ்ப்பாணம்]

இ போ. ச. காரைநகர் டிப்போவும் பருத்தித்துறை டிப்போவும் இன்று உதைபந்தாட்டத்தில் மோதிக் கொள்கின்றன பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெறுகிறது. (அ)

## யாழ். ஆயுர்வேதக்கல்லூரி புதிய மாணவரைச் சேர்த்தல்

1978ம் ஆண்டுக்கு யாழ் லங்கா ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி புதிய மாணவர் சேருதல் க. பொ. த. (சாதாரணம்) மூன்று திறமைச்சித்திகள், பாரம்பரிய வைத்தியத் தொடர்புடையோருக்கு முன்னுரிமையுண்டு. முதலாம்வருட மாணவர்கள் எனக் கருதப்படுவோர் மீளவும் விண்ணப்பிக்க வேண்டும். 30-12-1977க்கு முன் தகைமைகளைக் குறிப்பிட்டு ஆர். ஈ. டபிள்யூ. ஜெகோரட்ணம், அதிபர் 133, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் விண்ணப்பிக்கவும் விண்ணப்பப்பத்திரங்கள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

அதிபர்,
லங்கா ஆயுர்வேதக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

7980



## "எம். ஜி. ஆர். அரசின் இலட்சியம் என்ன?

# மக்களுக்கு வாழ்வு அளிப்பதா; தி. மு. க. மீது வஞ்சம் தீர்ப்பதா?"

## கலைஞர் ஆவேச உரை

தஞ்சாவூர், டிச, 20

''திராவிட முன்னேற்றக்கழகம் ஏழை எளிய மக்களின் துயர் துடைக்கும் பணிகளிலே ஈடுபட்டிருக்கிறது. இப்பணியில் தமிழக அரசு குறுக்கிட்டு கறுப்புக்கொடிகாட்டி கலவரத்தை ஏற்படுத்தத்திட்டமிட்டால் ஒருவேளை எனது உயிர் போனால் தவிர .. எவ்வளவு காயப்பட்டாலும்; கையொடிந்தாலும், மூன்று சக்கர நாற்காலியில் இருந்தாவது சட்ட சபைக்கு வந்தே தீருவேன்'' என தஞ்சாவூரில் நடைபெற்ற பிரமாண்டமான கூட்டத்தில் திராவிட முன்னேற்றக்கழகத் தலைவரும், தமிழக எதிர்க்கட்சித்தலைவருமான கலைஞர் மு. கருணாநிதி சூளுரைத்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: ''இன்று தமிழக மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருப்பது உயிர்ப் பிரச்னை-உணவுப் பிரச்னை- வயிற்றுப்பிரச்னை - வாழ்வுப் பிரச்னை இவைகளைத்தவிர அவர்கள் எதையும் எதிர்பார்க்க வில்லை. இன்றைய அரசு தமிழக மக்களுக்கு ஆக்கபூர்வமான பிரச்னைகளை எதிர்நோக்காமல எமக்கும் எமது கழக உறுப்பினர்களிலும் வஞ்சம் தீர்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

''நான் அவர்களைப்பார்த்துக் கேட்கிறேன். தி. மு. கழகம், இரண்டுவிதமான அணிகளுக்கும் தயாராயுள்ளது. ஒன்று களம்காணும் அணிக்கும் தயார். அல்லது துயர்துடைக்கும் பணி அணிக்கும் தயார் என்று கூறிவைக்க விரும்புகிறேன். ஆனால் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்திகலவரத்தை உண்டுபண்ண நாம் தயாரில்லை

''தமிழக முதலமைச்சருக்கும், காங்கிரஸ்காரர்களுக்கும் சொல்கிறேன் பொதுவாழ்வில் ஒருவன் இறங்குகின்றான் என்றால் அவன் சாவை எந்த நேரமும் எதிர்பார்த்துத்தான் இறங்கவேண்டும். இது கோழைக்கு எப்படித்தெரியும்? அரசியலில் இலட்சியப்பற்றும் கொள்கை வெறியுமுள்ளவர்களுக்கு மட்டுமே இந்தஉண்மை தெரியும் என்றார்.

கூட்டத்தில் ஜனாப் சாதிக் பாட்சா, அன்பழகன், பா.உ சண்முகம் உட்படப் பலர் உரையாற்றினர். (கெ-உ

## வேலணை திறப்பு விழா:

# "நான் ஏன் கலந்து கொள்ளவில்லை?"

### பண்டிதர் கா. பொ. தரும் விளக்கம்

(கொழும்பு)

'எனது தொகுதியில், எனது கொள்கைக்கு மாறாக-நிபந்தனைகளுக்கு மாறாக நிகழும் எந்த ஒரு நிகழ்ச்சியிலும் நான் கலந்து கொள்ள மாட்டேன் கலந்து கொள்வதும் நியாயமில்லை இப்படியான ஒரு சம்பவம்தான் வர்த்தக அமைச்சர் திரு. லலித் அதுலத் முதலி எனது தொகுதிக்கு விஜயம் செய்தபோது நிகழ்ந்தது' என்று தீவுப் பகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் 'ஈழநாடு'-க்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வேலணையில் நடைபெற்ற சந்தைப் படுத்தும் திணைக்களக் கிளைத் திறப்பு விழாவில் தாம் ஏன் கலந்து கொள்ளவில்லை என்பதற்கு தீவுப் பகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் அளித்துள்ள விளக்கத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'வேலணையில, வர்த்தக அமைச்சர் கலந்து கொள்ளும் விற்பனைத் திணைக்களத் திறப்பு விழாவில் கலந்து கொள்ளுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றக் குழு என்னைப் பணித்திருந்தது. இதன் பின்னரே இத் திறப்பு விழாவில் கலந்து கொள்ளச் சம்மதம் தெரிவித்திருந்தேன்.

'இதற்கிணங்க, குறிப்பிட்ட விழா, தமாஷாகவோ ஆடம்பரமானதாகவோ இருக்காமல் உத்தியோக பூர்வமானதாக மட்டும் இருத்தல் அவசியம் என்பதை வற்புறுத்தி, இது சம்பந்தமாக யாழ். அரசாங்க அதிபரிடமும் விற்பனைத் திணைக்கள ஆணையாளரிடமும் கூறியிருந்தேன் அவர்களும் இதனை ஏற்றுக் கொண்டனர்.

'பின்னர் என்ன நடந்தது? எனது தொகுதியில் கட்சி வர்ண-பச்சைக் கொடிகள் கட்டப்பட்டிருப்பதாகவும் சிகரம் அமைக்கப்பட்டிருப்பதாகவும் எனக்குத் தகவல் கிடைத்தது. உடனடியாக இதுபற்றி யாழ். அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு விபரத்தைக் கூறினேன். நான் ஏற்கெனவே தெரிவித்திருந்ததற்கு மாறாக 'வேலைகள்' நடைபெறுகிறதைப் பதை மனவருத்தத்துடன் சுட்டிக் காட்டினேன். அவர் எனது நிலையைப் புரிந்து கொண்டார். இதன் பின்னர் யாழ். செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட விவசாயக் கமிட்டிக் கூட்டத்தில் திரு. அ. அமிர்தலிங்கத்திடம் இது பற்றிக் கூறி, 'இந்த நிலையில் நான் கலந்து கொள்ள முடியாது' என்று தெரிவித்தேன்.

'நான் எனது தொகுதிக்குச் சென்றபோது பச்சைக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. சிகரமும் அமைக்கப்பட்டிருந்தது. இது கண்டு வருத்தப்பட்ட நான் உடனடியாக மீண்டும் அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு 'இவை அகற்றப்பட்டாலன்றி திறப்பு விழாவில் கலந்து கொள்ள மாட்டேன்' என்று கூறினேன்.

'பச்சைக் கொடிகளை அகற்றுவதாக உறுதி கூறிய அரசாங்க அதிபர், வேலணை விற்பனைத் திணைக்கள உதவி ஆணையாளருடன் தொடர்பு கொண்டு அவரை பணித்தார். பச்சைக் கொடிகளை அகற்றுவதில் தாமதம் ஏற்படும் என்பதாலும், அமைச்சர் வருவதற்குரிய நேரம் சமீபித்து விட்டதாலும் அவற்றும் வேலைகளை உடனடியாகச் செய்ய முடியவில்லை. நிலைமை இப்படி இருந்த போதிலும் இது சம்பந்தமாக எந்த வழ

[4-ம் பக்கம் பார்க்க]

## "அயல் நாடுகளுடன் நேசத்துடன் பழகவே பாரதம் விரும்புகிறது"

### — ஜனாதிபதி சஞ்சீவரெட்டி

புதுடில்லி, டிச. 20

''பாரதம் அண்டைநாடுகளுடன் பரந்த ரீதியிலான நட்புறவு வைத்துக் கொள்ளவே விரும்புகிறது'' என்று பாரத ஜனாதிபதி திரு சஞ்சீவரெட்டி கூறினார்.

தறபோது புதுடில்லிக்கு விஜயம் செய்துள்ள பங்களாதேஷ் ஜனாதிபதி ஜனாப் ஷியாவுர் ரஹ்மானுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டபோதே திரு. சஞ்சீவரெட்டி மேற்கண்டவாறு கூறினார்.

பங்களாதேஷ் ஜனாதிபதி தமது உரையில் ''பாரதத்தின் புதிய ஜனதா அரசு துரிதகதியில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதை நான் அறிவேன். எமது இரு நாடுகளுக்கு இடையேயும் கலை, கலாச்சார தொடர்புகள் மேன்மேலும் பலப்படவேண்டும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டால் நட்புறவு வளர்வதில் தடையேதும் இருக்காது'' என்றார்.

பொருளாதார உறவுகள் பற்றியும் இரு தலைவர்களும் பேசினர். (உ)

## தி. மு. க. வின் நிவாரணப்பணி

தஞ்சாவூர், டிச. 20

புயலால் பாதிக்கப்பட்ட தஞ்சாவூர் மக்களுக்கு உதவி அளிப்பதற்காக தி மு க கூட்டத்தில் திரட்டப்பட்டநிதிக்கு 36 000 ரூபாய் பணமும், 800 மூடை நெல், 4 மூடை சர்க்கரையுமாக77,000ரூபாய் கிடைத்தது. (கெ-உ)

## பூட்டோ ஆதரவாளர் கைது

இஸ்லாமாபாத், டிச. 20

பாகிஸ்தான் இராணுவ அரசு மாஜி பிரதமர் சுல்பிகார் அலி பூட்டோவின் ஆதரவாளர்கள் பலரைக் கைதுசெய்துள்ளது (உ)

## யாழ். லயன்ஸ் கழக சித்திரப் போட்டி பரிசு பெற்றோர்

(யாழ்ப்பாணம்)

யாழ் லயன்ஸ் கழகம் ஒழுங்கு செய்திருந்த நத்தார்புதுவருட வாழ்த்துக்கள் சித்திரப் போட்டியில் சிரேஷ்ட பிரிவில் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியைச் சேர்ந்த ரூபேந்திர கனகரத்தினம் முதலாவது பரிசையும், மத்திய பிரிவில் முதல் பரிசை அதே கல்லூரியைச் சேர்ந்த ஜி. ஜோனசனும், கனிஷ்ட பிரிவில் முதலாம் பரிசை யாழ். 180 பாகஷால் வீதியைச் சேர்ந்த ரி ஆர் மொறிஸ் என்பவரும் பெற்றுள்ளனர்.

மத்திய பிரிவில் இரண்டாம் பரிசு கொழும்புத்துறை சுவாமியார் வீதியைச் சேர்ந்த எஸ் மீரா பெற்றுள்ளார்

பின்வருவோர் ஆறுதல் பரிசுகளை பெற்றுள்ளனர்: யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியைச் சேர்ந்த சி. ஈ. ஜோன், ரி ராஜ்குமார், வி. பீ. பேர்க்மன, எஸ். எம். செபத்தியாப்பிள்ளை, புங்கங்குள வீதியைச் சேர்ந்த அ. வசந்தகுமார், பரியோவான் கல்லூரியைச் சேர்ந்த எஸ். பாலமுரளி. எஸ். பாலசண்முகம், ஆனைக்கோட்டை கூழாவடியைச் சேர்ந்த ரூபினி வில்பிரச், றெஜிரூபன், ரேவதி வில்பிரட். யாழ். வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சிவஞானி சிவஞானம், யாழ் சன்மார்க்க மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எம் ராதாகிருஷ்ணன், என். ஆனந்தன், ரி. கங்காதரன். எஸ். ரேகலா, கொட்டடி வைரவர்கோயிலைச் சேர்ந்த அருந்ததி நாகலிங்கம், யாழ் பரியோவான் கல்லூரியைச் சேர்ந்த ஏ. ஜி.ராஜ்குமார், ஊர்காவற்றுறை சென், மேரிஸ் கல்லூரியைச் சேர்ந்த ஜெய்சீவி ஞானம் சுண்டிக்குளி மகளிர் வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ் ராதை.

## இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

ஊர்காவற்றுறை மக்கள் வங்கியில் கடமையாற்றிய திரு. ஆ. சிவராசா பளை மக்கள் வங்கிக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

## "தமிழருக்குப் பொருளாதாரப் பிரச்னையே தலையாயது"

### — வட்டு. எம். பி.

(சங்கானை)

தமிழ் மக்களை எதிர்நோக்கும் பிரச்னைகளில் முக்கியமானது பொருளாதாரப் பிரச்னை. இதிலிருந்து விடுபடுவதற்கு நாம் பாகுபாடற்ற முறையில் கடின உழைப்பை மேற்கொள்ளல் அவசியம். இதனை நாம் 'செயற்படுத்த கிராம அபிவிருத்திச் சங்கங்கள் நல்லதோர்வாய்ப்பாக அமைந்துள்ளன ''

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு கூறினார்.

வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்க வருடாந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

திரு. அ. சி நடராசா தலைமையில் இக்கூட்டம் வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி சின்னப்பு பொன்மலர் பேசுகையில், ''கிராம அபிவிருத்தித் திட்டங்களை எல்லாம் கிராம அபிவிருத்திச் சங்கங்கள்மூலமே செய்வதற்கு புதிய ஆட்சியாளர் வழி வகுத்துள்ளனர். எனவே எமது பகுதிகளில் உள்ள எந்தத் துறையிலான முக்கிய விடயங்களை இவை செய்வதே சாலச் சிறந்தது''என்றார். [உ]

## லொறி விபத்தில் சாரதி மரணம்

[திருக்கோணமலை]

திருக்கோணமலை அன்னராணி அரிசி ஆலைக்குச் சொந்தமான லொறி ஒன்று பசளையினை இறக்கிவிட்டு திருக்கோணமலை நோக்கி வந்து கொண்டிருந்த சமயம், மழை காரணமாகப் பாதையைவிட்டு விலகி மரத்துடன் மோதிப் பெரும் விபத்திற்குள்ளானது. சாரதி ஸ்தலத்திலேயே மரணமானார் இவ்விபத்து பாலம் வட்டாரம் என்னுமிடத்தில் நடைபெற்றது. மரணமான சாரதியின் பெயர் தயாபாலா.



## சமயம் கட்டாய பாடமாக இருப்பதை

# தமிழக அறிஞர் பாராட்டுகிறார்

காரைநகர் மணிவாசகர் சபையின் ஆதரவில் இன்று முதல் எதிர்வரும் 25-ம் திகதி வரை நடைபெறவிருக்கும் மணிவாசகர் விழாவினை ஆரம்பித்துவைப்பதற்காக இலங்கை வந்திருந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேருரையாளர் திரு.கு. சுந்தரமூர்த்தி எம்.ஏ. அவர்களை நேற்று முன்தினம் சந்தித்து உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. யாழ் செட்டியார் அச்சக உரிமையாளர் இல்லத்தில் பேராசிரியர் சுந்தரமூர்த்தி அவர்களைச் சந்தித்தோம். பண்டித வித்துவான், சைவப்புலவர், சித்தாந்த நன்மணி, தொல்காப்பியச் செல்வர், தருமபுர ஆதீனப் புலவர் என்றெல்லாம் அடைமொழிச்சிறப்புக்கள் கொண்ட எம். ஏ. பட்டதாரியான பேராசிரியர் சைவப்பெருமக்களுக்கே உரிய பண்போடும், பரிவோடும் வார்த்தையாடுகிறார். கல்விச் செருக்கோ, பெருமையோ அவரிடம் சற்றுமே தென்படவில்லை. 'ஈழநாடு' சார்பில் நானும் அன்பர் 'ரவி'யும் அவரைச் சந்திக்கச் சென்றபோது நண்பர் 'சங்கர்' எங்களை பேராசிரியருக்கு அறிமுகம் செய்துவைத்தார். ஆசிரியர் சிவகுருநாதனும் இன்னும் சிலரும் உரையாடலில் கலந்துகொண்டனர்.

சமயம் முதல் இலக்கியம், அரசியல் என்று பலதரப்பட்ட விஷயங்களும் உரையாடலில் இடம்பெறறன.

இலங்கை பள்ளிக்கூடங்களில் இரண்டாம் வகுப்புத் தொடங்கி பல்கலைக்கழகப் பிரவேச வகுப்பு வரையில் சமயம் கட்டாயபாடமாகப் போதிக்கப்படுவதை பேராசிரியர் வெகுவாகப் பாராட்டுகிறார்.

மாணவர் மத்தியில் இது ஒழுக்கத்தையும் நேர்மை உணர்வையும் வளர்க்க உதவும் என்று அவர் கருதுகிறார்.

சமயபாடம் கட்டாயமாக்கப்படுவது மாணவர்களுக்கு ஒரு பளுவாக இருக்காதா என்று வினவியபோது, 'இருக்காது, மாறாக மாணவர்களின் உள்ளவளர்ச்சிக்கு இது உறுதுணையாகவிருக்கும்'' என்றார்.

சமயம் இம்மைக்கு எது விதத்திலும் உதவமாட்டாது என்ற எண்ணம் இளைஞர் மத்தியில் ஏற்பட்டுவருகிறது. ஆனால் இது வாழ்க்கைக்கு உதவும் என்ற எண்ணத்தை ஆசிரியர்களும் மற்றவர்களும் உணர்த்தவேண்டும், அதேசமயம் சமயபாடங்களைப் பயிற்றுவிப்போரும் சமயநெறிகளின்படி நடந்து முன்மாதிரியாகத் திகழவேண்டும் என்றார்.

இளைஞர்கள் மத்தியில் சமயப்பற்று குறுகிவருவது பற்றி குறிப்பிட்டபோது,

"சமயம் நமது வாழ்க்கையை உயர்த்தும், அதற்காகவாது சமயத்தை அறியவேண்டும் என்று இளைஞர்கள் கருதவேண்டும், மேலும் வாழ்க்கையில் ஒருவன் என்னதான் செல்வமும், வசதியும் பெற்றிருந்தாலும் மன அமைதியைப் பெறுவதற்கு சமயந்தான் உதவ முடியும் என்கிறார் பேராசிரியர். மேலும் சமயத்தை உபதேசிப்பவர்களும் உபதேசத்துடன் நின்றுகொள்ளாமல் சமுதாயத்தின் நன்மைகள் துயரங்களில் பங்குஏற்றுக்கொள்ள வேண்டும். சமுதாயத்துடனும் நெருங்கி செயல்படவேண்டும் என்கிறார் அவர்.

### மாணவர் பதற்றம் நீங்க

மாணவர் சமுதாயத்தில் நிலவும் பதற்ற நிலைமைபற்றி உரையாடல் திரும்பியபோது. இந்தப் பதற்றநிலையைப்போக்குவதற்கு பின்வரும் அம்சங்களை அனுபவமிக்க ஆசிரியரான பேராசிரியர் குறிப்பிட்டார்.

ஃ ஆசிரியர்கள் மாணவர்களை முழுமையாக ஈர்த்து பாடங்களை திறமையோடு கற்பிக்கவேண்டும், ஃ பெற்றோரும் மாணவர்களின் வளர்ச்சி தொடர்பாக கல்வி நிலையங்களுடன் அதிக அக்கறைகாட்ட வேண்டும். பள்ளியில் சேர்த்துவிட்டவுடன் தம் கடமை முடிந்துவிட்டதாகக் கருதாமல் பாடசாலைகளுடன் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும். ஃ அரசியல் கட்சிகளும் அரசாங்கமும் மாணவர்களை அரசியலுக்குள் இழுக்காமல்இருக்க வேண்டும். அரசியல் போராட்டங்களில் மாணவர்களை ஈடுபடுத்தும் நிலை நீங்கினால் அல்லாமல் இந்த நிலை மாறாது. ஃ மாணவர்களும் தமது எதிர்காலம் சிறப்பாய் அமைவதற்கு கல்வியில் அக்கறை கொள்வது அவசியம் என்பதை உணர வேண்டும்.

மாணவர்கள் கல்வியைமுடித்துக் கொண்டு ஏதாகிலும் ஒரு பணியில் ஈடுபடுவதற்குமுன் ஏதாகிலும் ஒருதுணைத்தொழிலைப் பயின்றிருப்பது நல்லது என்கிறார் பேராசிரியர். தொழில் கிடைக்குமுன் வாழ்க்கைக்கு உறுதுணையாக இந்தத் தொழில் இருக்கமுடியும் என்றும் கூறினார்.

மாணவர்கள் தம் தாய்மொழியுடன் வேறு பலமொழிகளையும் கற்பது என்ற நிலை ஏற்படுமானால் அது அவர்கள் மீது மேலும் பளுவைச் சுமத்துவதாக இருக்காதா என்று கேட்டபோது, மாணவர்களின் அறிவை யாரும் குறைவாக மதிப்பிடலாகாது. மூன்றுமொழிகளையல்ல, முப்பது மொழிகளைக்கூடக் கற்கும் ஆற்றல்தற்காலச் சிறுவர்களுக்குஉண்டு. ஆனால் கட்டாயம் என்றுவரும்போது அதுஎல்லா மாணவர்களுக்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். மாணவர் தகுதியை ஆற்றுப்படுத்துவதே முக்கியம் என்றார். இலக்கியம் தொடர்பாக உரையாடல் திரும்பியபோது இலக்கண மரபு பிறழாமல் எழுதிவரும் எழுத்தாளர்களுக்கும் நவீனகால எழுத்தாளர்களுக்குமிடையில் நெருக்கமான உறவு இல்லாதது குறித்து கவலை தெரிவித்தார். எதுவானாலும் எழுத்தாளர்கள் இலக்கண மரபுகளைப் பேண வேண்டும். இல்லையெனில் தமிழ்மொழிக்கே பாதகமாகும் என்றார்.

'பேனா'

## பெருமாள் கோவிலில் இன்று

[யாழ்ப்பாணம்]

யாழ். பெருமாள் கோவிலில் நடைபெறும் ஏகாதசி உற்சவத்தில் இன்று இரவு 12 மணியளவில் "மானம் காத்த கண்ணன்" என்னும் பொருள்பற்றி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா இன்னிசை விரிவுரை நிகழ்த்துவார். [அ]

## விதைகிழங்கு விநியோகத்தில்

# சீர்கேடாம்

### எம்.பி.யிடம் புகார்

(சங்கானை)

விதை உருளைக்கிழங்கு விநியோகம் சீர்கேடான முறையில் நடைபெற்றுள்ளதாக மானிப்பாய்த் தொகுதி விவசாயிகள், மானிப்பாய்த் தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. வி. தருமலிங்கத்திடம் புகார் செய்துள்ளனர்.

முற்பணம் கட்டியோர்களுக்குமட்டும் கிழங்கு வழங்கப்படும் எனத் தெரிவித்து அதன்படி பணம் செலுத்தியவர்களுக்கும் விதை கிழங்கு பருமனிலும் பாகுபாடு காட்டப்பட்டு வழங்கப்பட்டதாம்.

இதற்கான பசளை, உரம் போன்றவற்றிற்கு முற்பணம் செலுத்தியும் அவைகள் விநியோகிக்காதமையால் விவசாயிகள் சிலர் உரம் இடாமலேயே கிழங்கை நட்டுள்ளனர். சில விவசாயிகள் என்ன செய்வதெனத் தெரியாமலே திண்டாடுகின்றனர் எனவும் கூறப்படுகிறது.

வடபகுதியில் இருக்கும் விவசாயப் பெருக்கக் குழுக்கள் விநியோகம் செய்த விதை கிழங்கின் விலையும் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக உள்ளதெனவும் சொல்லப்படுகிறது.

## சீ - நோர் திட்டத்துக்கு அமைச்சர் பாராட்டு

[யாழ்ப்பாணம்]

'இளைஞர்களது விடாமுயற்சியும் அதிக உழைப்புமே, இத்தொழிற்சாலையின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாகும். இளைஞர் சக்தியை நல்லவழியில் பயன்படுத்தும், நிர்வாகஸ்தர்களை பாராட்டாமல் இருக்க முடியாது" என்று காரைநகரிலுள்ள சீ-நோர், அபிவிருத்தி திட்டத்தின் தொழிற்சாலையை நேற்றுமுன் பார்வையிட்ட வர்த்தக அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

வர்த்தக அமைச்சரையும் பிரதி துணை அமைச்சரையும், தொழிற்சாலையில் வைத்து

[5-ம் பக்கம் பார்க்க]

## வர்த்தக மந்திரி திரும்பினார்

[திருநெல்வேலி]

தமது பயணத்தை முடித்துக் கொண்ட வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியை பலாலி விமான நிலையத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களும் அரசாங் அதிகாரிகளும் வழிஅனுபிவைத்தனர்.

நல்லூர் தொகுதி ஐ.தே.க. அமைப்பாளர் திரு. ரி மனோகரன்,வாலிப முன்னணி செயலாளர் திரு. ஜே.என். பி.பாக்கியராஜா உட்பட ஏராளமான ஆதரவாளர்கள் விமான நிலையத்தில் குழுமியிருந்தனர். [உ]

## வேலணை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யமாகவும் உதவி ஆணையாளர் என்னிடம் தொடர்பு கொள்ளவில்லை என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். என்னை எதுவுமே கலக்காமல் கட்சி ரீதியாக இந்த ஒழுங்குகள் செய்யப்பட்டதால், திறப்புவிழாவில் நான் கலந்து கொள்ளவில்லை. எனது மனச்சாட்சி இதற்கு இடமளிக்கவில்லை. எனது தொகுதியில் எனது கொள்கைக்கு நிபந்தனைகளுக்கு மாறாக ஏற்கனவே செய்த திட்டங்களுக்குப் புறம்பாக நடைபெறும் எந்த நிகழ்ச்சியிலும் நான் கலந்து கொள்ளமாட்டேன். இது தான் வேலணையிலும் நடந்தது. இதுதான் உண்மை." [ம]

## 'பிறப்பினால் மட்டுமே பெருமை வரா'

(கம்பளை)

"பிறப்பினால் எவருக்கும் பெருமை வராது. சிறப்பு வேண்டுமானால் நல்லன செய்ய வேண்டும்" என பௌத்த குருவண. ஸ்ரீஞானலங்காரதேரோ 'மலைக்குருவி' இளைஞர் இலக்கிய வட்டத்தின் ஆதரவில் நடைபெற்ற பாரதி விழாவில் உரையாற்றுகையில் கூறினார்.

'ஆத்மஜோதி' ஆசிரியர் திரு. நா. முத்தையா தலைமையில் கம்பளை நகரமண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் வண. ஸ்ரீஞானலங்காரதேரோ தமிழில் உரையாற்றினார். பௌத்த சமயம் பற்றிப் பல புத்தகங்களைத் தமிழில் எழுதிய இவர் சிங்கள-தமிழ் மக்களின் ஒற்றுமைக்காகப் பாடுபடுபவராகும். [அ]


## திருவெம்பாவை பூஜைக்கு

தேவையான

- விளவு சூடம்
- அபிஷேக திரவியங்கள்
- அபிஷேகச் சந்தனம் (உடன் யந்திரத்தினால் அரைக்கப்பட்டது)
- அபிஷேகக் குங்குமம்
- அபிஷேக விபூதி
- அபிஷேக வாசனாதிகள்; பன்னீர்; அத்தர்
- கற்பூரம், சாம்பிராணி, ஊதுபத்திகள்
- நைவேத்தியப் பொருட்கள் (அவல், கற்கண்டு, சர்க்கரை முதலியன)

மற்றும்

சகல சாமான்களும் நிதானமான விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த 42 ஆண்டுகளாக நற்சேவை புரிந்து நற்பெயர் பெற்றவர்கள்.

### எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி,

(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனாதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை, வியாபாரிகளும்)

191, கே. கே. எஸ். றோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.

"பாவேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு. கொழும்பு-11.

போன்: 541 Residence 7068 கொழும்பு: 35825


# "கல்விமான்கள் கொண்ட தேசிய ஆலோசனை சபை"

## அவசியம் என்கிறார் முன்னாள் அதிபர் சபாரத்தினம்

[யாழ்ப்பாணம்]

"வாழ்வில் ஏற்படும் பிரச்னைகளைச் சமாளிக்கும் திறமையே கல்வியாகும், நாட்டினதும், தனிநபரினதும் பிரச்னைகள் மலிந்து கிடப்பதற்கு கல்வியின் குழப்பநிலையே முக்கியகாரணமாகும். பாடசாலைகளைப் பொறுப்பேற்ற அரசாங்கம், கல்வித்திட்டத்திலேயோ, கல்வி நிர்வாகத்திலேயோ ஒரு ஸ்திரமான நிலையை உருவாக்கத் தவறிவிட்டது".

சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியர்கழக வருடாந்த விருந்தில் பேசுகையில் யாழ். இந்துக் கல்லூரி முன்னை நாள் அதிபர் திரு. என். சபாரத்தினம் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக சபாரத்தினம் தம்பதிகள், சாவகச்சேரி எம்.பி. வி. என். நவரத்தினம் ஆகியோர் விருந்தினராகக் கலந்துகொண்டனர்.

திரு. சபாரத்தினம் மேலும் கூறியதாவது: "கல்விக்குரிய நிதியைத் திரட்டி அளிப்பதுடன், அது சரியானமுறையில் பயன்படுத்தப்படுகிறதா என்பதை ஆராய்வதும் அரசின் முக்கியபொறுப்பு. பாடசாலைகளின் வளர்ச்சி, போதிக்கப்படும்கல்வி, போதிக்கும் முறை முதலிய கல்வியின் உள்ளுடன், கல்விமான்கள், சிந்தனையாளர்கள், ஆசிரியர்கள் அனைவரின் முக்கிய பொறுப்பாகும். பாராளுமன்றத்தில் உருவாகும் கல்விச்சட்டங்கள், மக்கள் உள்ளத்தில் உருவான கருத்துக்கள், நாட்டில் நடைபெறும் கருத்துப் பரிமாறல்களின் முடிவாகவே இருக்க வேண்டும்.

கட்சி அரசியலின் கேடுகள் எவ்வளவுதூரம் கல்வியைப் பாதித்திருக்கின்றது என்பது எமக்கெல்லாம் தெரிந்ததே. கல்வி சட்சிக்கப்பாற்பட்டது என்பதை அரசியல் வாதிகள் உணருங்கால, பாராளுமன்றத்தில் ஆசிரிய இடமாற்றம் தான் கல்வியின்முக்கியபிரச்னை என்பது தவறென உணர்வார். ஆசிரியரின் சுதந்திரம், பெற்றோர், பொதுமக்கள், மாணவர் கூட பொறுப்புடன் பங்கு கொள்ளும் கல்விமுறையே நாட்டுக்குப் பயனளிக்கும் கல்விமான்களைக் கொண்ட தேசிய ஆலோசனைச் சபை அவசியமானது. [உ]

ராணி தினசரி 10-30, 2.30, 6·00, 9.30.
[யாழ்ப்பாணம்] எம். ஜி. ஆர்.-விஜயா, நாகேஷ் நடித்த
விவசாயி
(புதிய பிரதி)

11-வது ஜனத்திரள் வாரம்!
ராஜா யாழ்நகர் தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
ஜெமினி, விஜயகுமாரி, கே ஆர். விஜயா நடித்த
தசாவதாரம்
பாடசாலை மாணவர்கள் ஆசனங்களை பதிவுசெய்து கொள்ளவும்.
தந்தை செல்வாவின் இறுதியாத்திரை வெகு விரைவில் இப்படத்துடன் காண்பிக்கப்படும்.

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெமினி - சாவித்திரி (இருவேடங்களில்)
ரங்கராவ், M R ராதா
காத்திருந்த கண்கள்
(புதிய பிரதி)

Regal (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 P. M. only
Call me Bawana
(Color)

மனோஹரா (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி- ஜெமினி - லக்ஷ்மி - நிர்மலா
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ். விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்; கே. பாலசந்தர்

ஸ்ரீதரில் 23-12-77 முதல்
(யாழ்ப்பாணம்) நத்தார் புதுவருட வெளியீடு
தினசரி 4 காட்சிகள்
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
★ முத்துராமன் ★ ஜெயசித்திரா
★ சுந்தரராஜன் ★ ஸ்ரீகாந்த்
வி. கே. ராமசாமி, தேங்காய் சீனிவாசன்
குமாரி பத்மினி நடித்த
அவன் ஒரு தொடர்கதை, பெண் தெய்வம் வரிசையில் மற்றுமோர் வெற்றிப் படைப்பு.
இன்ஸ்பெக்டர் மனைவி
திரைக்கதை, வசனம் டைரக்ஷன்
ஏ.சி. திருலோகசந்தர் எம். ஏ
இசை. இன்னிசைவேந்தர்கள்
சங்கர் - கணேஷ்

கடைசி 2 தினங்கள் மட்டும்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
ஜெய்சங்கர் ஜெயசுதா
பந்தாட்டம்
(புதிய பிரதி)

## சங்கீதப் பரீட்சை 27-ம் திகதி

(அரியாலை)

கடந்த ஆவணி மாதம் நடைபெற்ற வன்செயல்களினால் பின்போடப்பட்ட வட இலங்கைச் சங்கீதசபையின் பரீட்சைகள் இம்மாதம் 27ம் திகதி தொடக்கம் தைமாதம் 8-ந் திகதி வரை நடைபெற விருப்பதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

## வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

ஒட்டுட்டானில் குடியமர்த்தப்பட்ட அகதிகளின் குழந்தைகளுற்கும் பெண்களுக்கும் பெருமளவில் ஆடைகள் தேவைப்படுவதாக தமிழர் புனர்வாழ்வுச் சபைத்தலைவி திருமதி சண்முகலிங்கம் தெரிவித்தார்

அன்பளிப்புச் செய்பவர்கள் ஒருவதுக் குட்பட்ட குழந்தைகளுக்கான ஆடைகளை 18ப நாவலர் வீதியிலுள்ள இல்லத்தில் அன்பளிப்பு செய்யுமாறு கோரியுள்ளார். [தெ]

## ஆண்டு விழா

[திருமலை]

திருக்கோணமலைப் பிராந்திய நெற்சந்தைப்படுத்தும் சபையின் தொழிலாளர்களின் நலன்புரிச் சங்க ஆண்டு விழா மேற்படி சபை மண்டபத்தில் இம்மாதம் 30 ம் தேதி நடைபறவிருக்கிறது.

இவ்விழாவின் போது பல களியாட்டங்களும், இராப்போசன விருந்தும் இடம் பெறும். [அ]

## சீ-நோர்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

நிர்வாக அதிபர் திரு. எஸ். ஸ்ரனிஸ்லாஸ் மலர்மாலை சூட்டி வரவேற்றார். பின்னர் அமைச்சர் தொழிற்கூடங்களைப் பார்வையிட்டார். அமைச்சருடன் அரசாங்க அதிபர் திரு. டபிள்யு. ஏ எல் விஜயபாலாவும் வந்திருந்தார். (கெ)

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30
ஜெமினி - சாவித்திரி
பாக்கியதேவதை

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி, 2-30, 6-30, 9-30
மனிதரில் மாணிக்கம்

RIO Daily 4 Shows
(Jaffna)
PRASURA OF THE AZATICS

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி பி.ப. 6-45, 10-00
சனி, ஞாயிறு பி ப. 2-30
எம்.ஜி ஆர்-லதா
உழைக்கும் கரங்கள்

# "அறிவிப்பின்றியே நாணய மதிப்புக் குறைக்கப்பட்டது"

— என். எம்.

[கம்பளை]

'இன்றைய நிதியமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தால் பொது மக்கள் அடையப்போகும் பாதிப்புக்கள் இன்னும் 3 மாதங்களில் தெரியும் நாணய மதிப்புக் குறைக்கப்பட்டதெனக் கூறுமலேயே நாணய மதிப்புக் குறைக்கப்பட்டுள்ளது' என்று முன்னாள் நிதியமைச்சர் கலாநிதி என். எம். பெரேரா குறிப்பிட்டார்.

வரவு செலவுத் திட்டம் பற்றி பல இடங்களிலும் உரை நிகழ்த்தி வரும் கலாநிதி பெரேரா கம்பளை நகர மண்டபத்தில் உரைநிகழ்த்தினார் கம்பளை லங்கா சமசமாஜக் கட்சியினால் ஒழுங்கு செய்யப்பட்ட இக் கூட்டத்தில் பலராலும் விடுக்கப்பட்ட கேள்விக் கணைகளுக்கும் அவர் பதிலளித்தார்.

'வாசுதேவ நாணயக்காராவைக் கட்சியிலிருந்து விலக்கியது சரியா? என ஒருவர் கேட்டபோது பதிலளித்த கலாநிதி என் எம். பெரேரா 'கட்சிக் கொள்கைகளுக்கு மாறாக நடப்பவர்கள் கட்சியிலிருந்து விலக்கப்பட்டது தவறல்ல. இதன் முன்னரும் பாலா தம்பு, எட்மண்ட் சமரக்கொடி போன்றோரும் உள் புரட்சிசெய்ய முயற்சித்து கட்சித் தலைமைப் பீடத்தால் இடைநிறுத்தம் செய்யப்பட்டனர் இப்படி தீவிரமாக இறங்குபவர்கள் இறுதியில் ஐக்கிய தேசியக் கட்சியிலேயே சங்கமமாவார்கள்' எனக்கூறினார் [அ]

வீட்டுக்காரரை

## துப்பாக்கியால் சுட்டு துப்பாக்கி கொள்ளை

(கொழும்பு)

மூவர் அடங்கிய கோஷ்டி ஒன்று வீட்டுக்காரர் ஒருவரைத் துப்பாக்கியால் சுட்டுப் படுகாயப்படுத்திவிட்டு அவரது துப்பாக்கியை கொள்ளையடித்துச்சென்றுவிட்டதாம். இச்சம்பவம் வியாங்கொடையில் நடைபெற்றது.

காயமடைந்தவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ)

## குடும்பத் தகராறு: இளம் பெண் தற்கொலை

(திருநெல்வேலி)

எட்டு மாதக் குழந்தை ஒன்றின் தாயான இளம்குடும்பப்பெண் ஒருவர் வாழ்வில் விரக்தியுற்று சமையலறையில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

இப்பரிதாப சம்பவம் திருநெல்வேலியில் நடைபெற்றது.

வீரசிங்கம் தனலட்சுமி (23 வயது) என்ற இப்பெண் இம்முடிவுக்கு வருவதற்கு குடும்பத்தகராறினால் ஏற்பட்ட விரக்தியே என சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். அமிர்தலிங்கம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (உ)

பாலர் ஆசிரியைகள்

## கோரிக்கைக்கு ஆசிரிய சங்கங்களும் ஆதரவு

[யாழ்ப்பாணம்]

"வட இலங்கைத் தமிழ்ப் பாலர் பாடசாலை ஆசிரியைகள் சங்கத்தினரின் கோரிக்கைகள் நியாயமானவையே இவ்விடயத்தில் எமது ஒத்துழைப்பும் உண்டு. என்று லங்கா ஜாதிகுரு சங்கமயத் தலைவர் திரு ஆரியவன்ஸ, வட இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. எஸ். கே. சுந்தரலிங்கம். வடஇலங்கை தமிழாசிரியர் சங்கத் தலைவர் திரு. கே. மகாலிங்கசிவம் ஆகியோர் தம்மைச் சந்தித்த மேற்படி பாடசாலை ஆசிரியைகள் சங்கத் தூதுக்கோஷ்டியினரிடம் உறுதியளித்தனர்.

'அரசாங்க ஆசிரிய நியமனத்தில் தகைமையுள்ள பாலர் ஆசிரியைகளுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும். வேலையற்றுப் போகவிருக்கும் தகுதிவாய்ந்த சகல பாலர் ஆசிரியைகளுக்கும் வேலைவழங்கப்படவேண்டும்.' என்ற தமது கோரிக்கைகளை இத்தூதுகோஷ்டியினர் வலியுறுத்தினர்.

திருமதி. வேதவல்லி கந்தையா தலைமையில் சங்கத் தலைவி செல்வி இராஜேஸ்வரி அப்பையா, செயலாளர் செல்வி அமிர்தாம்பிகை கந்தசாமி ஆகியோர் இத்தூதுக் குழுவில் இடம்பெற்றனர். தமது கோரிக்கைகளை இச் சங்கத்தினர் கல்வி மந்திரியிடமும் வலியுறுத்தியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

• • •

## பலவாரமாக திறக்கப் படவில்லை

[வேலணை]

வேலணை வங்களாவடியில் உள்ள விற்பனைத் திணைக்களத்தின் கொள்முதல் நிலையம் பல வாரங்களாகத் திறக்கப்படாமலிருக்கிறது ஏற்கனவே இந்த கொள்முதல் நிலையத்தில் பல ஆயிரம் ரூபாவுக்கு மேல் விவசாயிகளிடமிருந்து மிளகாயைக் கடனாக வாங்கி இதுவரை அவர்களுக்குப் பணமெதுவும் வழங்கப்படவில்லையென்றும் கூறப்படுகிறது விவசாயிகள் பலர் இதுபற்றி மேல் அதிகாரிகளுக்குப் புகார் செய்துள்ளனராம் (அ)

வெலிங்டன் (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-ஜெய்கணேஷ்
மூத்தான முத்தல்லவோ

லிடோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ். நகர்) போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

### மணிவாக்கு

கண்களை இழந்தவனல்லக் குருடன். எவன் தன்னிடமுள்ள குறைகளை மறைக்கிறானோ அவனே குருடன்.

— காந்திமகான்

ஈழநாடு
The Eelanaadu

## எது முக்கியம்?

நாடு முக்கியமா? கட்சி முக்கியமா?

நாடு முக்கியமானால் அரசாங்கம் மேற்கொள்ளும் நல்ல திட்டங்களையெல்லாம் வரவேற்க வேண்டும். அவைகளில் உள்ள குறைகளை எடுத்துக் கூறி திருத்த முனைய வேண்டும்.

பொறுப்புள்ள எதிர்க் கட்சிகளின் கடமை இது.

கட்சி வளர்ச்சிதான் முக்கியம் என்றால்; எடுத்ததற்கெல்லாம் அரசைத் திட்டித் தீர்ப்பதுடன் நல்ல திட்டங்களிலும் வேண்டுமென்றே குறைகண்டு கூச்சலிட வேண்டும்.

பொறுப்பற்ற எதிர்க்கட்சிகளின் போக்கு இது?

எக்கட்சி எதைச் செய்தாலும் மக்கள் அதை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டுதான் வருகிறார்கள் என்பதை யாரும் மறந்துவிடலாகாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னாள் சுகாதார அமைச்சர் திரு. டபிள்யு. பி. ஜி. ஆரியதாசா பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை நம்மை மேற்கண்டவாறு சிந்திக்கத் தூண்டுகின்றது.

அரசின் புதிய வரவுசெலவுத்திட்டத்தை அவர் வெகுவாகப் பாராட்டியிருப்பதுடன், இந்த வரவுசெலவுத் திட்டம் அமுலாகும்போது நாட்டின் உறுதியான வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் வழிசெய்யும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அரிசிப்பங்கீட்டில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தவும், இலவச அரிசி விநியோகத்தில் புதுநடைமுறைகளைப் புகுத்தவும் நிதியமைச்சர் ஏற்பாடு செய்துள்ளதை எதிர்க்கட்சிகள் சில வன்மையாகக் கண்டித்துவரும் வேளையில் முன்னாள் அமைச்சர் ஒருவர் அரசின் திட்டங்களைப் பாராட்டியிருப்பது சிந்தனைக்குரியது.

முன்னைய அரசும் பல அபிவிருத்தித் திட்டங்களைக் கொண்டு வந்தது. ஆனால் அத்திட்டங்கள் ஆரம்பமான கையோடு மக்கள் பாவுக்கும், பாணுக்கும் 'கியூ' வரிசைகளில் இரவுபகலாக தவம் கிடக்க நேர்ந்தது.

அரிசியின் விலை எட்டு ஒன்பது ரூபாய்வரையில் ஏறியது. மிளகாய் விலை முப்பது, நாற்பது ரூபாய் வரை ஏறியது. பசியும் பட்டினியும் அதிகரித்தன!

மக்கள் அதிருப்தியடைந்தனர். அதன் விளைவை கடந்த தேர்தலின்போதும் கண்டோம்.

அதே நிலைமையை இந்த அரசின் திட்டங்களும் ஏற்படுத்தக்கூடாது என்பதே எமது விருப்பம்.

# 'அரசின் படஜட்
## மக்களுக்கு விரோதமானது
### கம்யூ பிரமுகர் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

"இவ்வரசாங்கத்தின் மக்கள் விரோத வரவு செலவுத் திட்டம் தொழிலாளர் பொதுமக்களின் எதிர்ப்புகளுக்கு தாக்குப்பிடிக்க முடியமல் போய் விட்டது. வரவு செலவுத் திட்ட ஆலோசனைகள் மாற்றியமைக்கட படுவதே இதற்கு உதாரணமாகும்."

இவ்வாறு அரிசி, சீனி வெட்டும்; கூப்பன் பறிப்பும் முதலானவற்றை எதிர்த்து கம்யூனிஸ்ட் கட்சி வடபிரதேச செயலாளர் திரு அ. வயித்திலிங்கம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில்:

"வாக்காளர்கள் ஒருமுறை வாக்களித்துவிட்டு அரசாங்கம் தவறு செய்கின்றபோது 6 வருடங்கள் வரை தட்டிக் கேட்க காத்திருக்கத் தேவையில்லை. பொதுமக்களும்தொழிலாளர்களும் தமது அபிப்பிராயத்தை பலவேறு வழிகளிலும் தெரிவிக்கவேண்டும்" என்று குறிப்பிட்டார்.

மார்க்ஸிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. வி. ஏ. கந்தசாமி பேசுகையில், "இந்த வரவு செலவுத் திட்டம் நாட்டையும் மக்களையும் 25 வருடங்களுக்குப் பின் தள்ளி, 1953ல் தொழிலாளர் தியாகங்கள்செய்து பெறறெடுத்த உரிமைகளை அழிக்குப திட்டமாகும். 1953ம் ஆண்டு தொழிலாளர் விவசாயிகள் ஐக்கியப்பட்டுப் போராடி அரசாங்கத்தை, ஆட்சியைவிட்டு விரட்டியதை மறக்கமுடியாது. சுதந்திர வர்த்தக வலயப் மூலம் அந்நியருக்கு இந்த நாட்டில் சுதந்திரம் கொடுப்பதால் எங்கள் சுதந்திரமே பறிபோகும்" என்றார்.

தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டி சார்பில் உரையாற்றிய திரு பொன் குமாரசாமி பேசுகையில், 'தமிழ் மக்கள மதியில்' என்றுப இல்லாத எழுச்சியாகத் தொழிற்சங்கங்கள் ஒன்றுபட்டு படஜடடுக்கு எதிராகக் கூட்டம் நடத்தியதற்கு நாம் திரு ஜே ஆருக்கு நன்றி செலுத்தவேண்டும். தொழிலாளர் உரிமையைக் காப்பதற்காக யாழ்ப்பாணமே இம்முறை ஏனைய மாகாணங்களுக்கு வழிகாட்டி நிற்கின்றது. இதன்மூலம் தொழிற்சங்க இயக்கதநில் யாழ்பபாணம் பின்தங்கியுள்ளதென்ற அவப்பெயரைத் துடைத்தெறிந்துவிட்டார்கள்" என்றார்.

பொதுச்சேவைத் தொழிற்சங்க சம்மேளனத் தலைவர் திரு. ஜே ஏ. கே. பெரேரா பேச்சுகையில், இந்த வரவு செலவுத் திட்டம் ஒருவனுடைய ஒரு பையில் 50 ரூபாவைப் போட்டுவிட்டு மறு பையிலிருந்த 150 ரூபாவைக் கொள்ளையடிக்கின்றது என்றார்.

மற்றும் திருவாளர்கள் அ. இலட்சியபூபதி, எஸ். பரமராசா, வே. பொன்னம்பலம், சி. நடராசா, எஸ். இரத்தினம், ஏ. ஜோசப், கே இராமநாதன், எஸ். யோகராசா முதலானோரும் உரையாற்றினர்.

(கூ-அ)

### யாருடையது?

ராஜா தியேட்டருக்கு முன்பாக, கண்டெடுக்கப்பட்ட 4 கூப்பன்கள், யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். பொன்னுத்துரை என்பவரால் "ஈழநாடு" காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சிகாட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஃ ஃ ஃ

ஆரியகுளத்தில் ஸ்ரான்லி வீதியைச்சேர்ந்த ராஜ்மோகன் என்பவரால் கண்டெடுக்கப்பட்ட உறுதியொன்று, ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

### மணிவாசகர் விழா
### இன்று ஆரம்பமாகிறது

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மாணிக்கவாசகர் சபை ஆதரவில் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான வசந்த மண்டபத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேருரையாளரும், தருமபுர ஆதீனப்புலவர் திரு. சுந்தரமூர்த்தி மாணிக்கவாசகர் விழாவினை இன்று ஆரம்பித்துவைக்கிறார்.

இவ்விழா 25-ம் திகதி வரை தொடர்ந்து நடைபெறுகிறது.

சைவசமயப்பாடல் பரீட்சையில் சித்திபெற்றவர்களுக்கு பரிசில்களை சிவதர்மவள்ளல் திரு. க. கனகராஜா வழங்குவார்.

(கா)

### ஆஸி. இந்திய கிரிக்கெட் டெஸ்ட்

போர்த், டிச 20

ஆஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்குமிடையே இங்குநடைபெறும் 2வது கிரிக்கெட் டெஸ்டில் இன்றைய ஆட்ட இறுதிவரை ஆஸ்திரேலியா தனது 2வது இன்னிங்ஸில் 1 விக்கெட் இழப்புக்கு 25 ஓட்டங்கள் எடுத்தது. முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா மொத்தம் 394 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் 9 விக்கட்டுகள், நஷ்டத்துக்கு 330 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 402 ஓட்டங்களும் எடுத்திருந்தது.

நாளை புதன்கிழமை ஆட்ட இறுதிநாளாகும்.

### ஈரானில் பூகம்பம்
# 500 பேர் பலி!

தெஹ்ரான், டிச, 20

ஈரானில் இன்று நிகழ்ந்த பூகம்பத்தல் 500 பேர் மாண்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

ஈரானின் தென்கிழக்குமாகாணத்தில் இப்பூகம்பம் ஏற்பட்டது

ஈரான் மன்னர் ஷா பாதிக்கப்பட்ட பகுதிகளை இன்று பார்வையிட்டார்

# பெண் கைது!
## சிறுவனைத் தாக்கினாராம்

[யாழ்ப்பாணம்]

வேலைக்காரச் சிறுவனைத் தாக்கியதாகக் கூறப்படும் பெண் ஒருவரைப் பொலிசார் கைதுசெய்து காவலில் வைத்துள்ளனர்.

அரியாலையைச் சேர்ந்த ஸ்ரீகந்தராஜா ராஜலட்சுமி என்ற பெண்ணே மேற்படி கைதுசெய்யப்பட டுக் காவலில் வைக்கப்பட்டவராவார்.

தெருவீதியில் அழுதபடி நின்ற சிறுவன் ஒருவனை பொலிசார் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை நடாத்தியபோது சிவஞானம் என்ற அந்த 10 வயதுச் சிறுவனின் உடல் எங்கும் பலத்த அடிகாயம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. சிறுவனை ஆஸ்பத்திரியில் அனுமதித்த குருநகர் பொலிஸ் பையனைத் தாக்கியவர் என்ற சந்தேகத்தின்பேரில் மேற்படி பெண்ணைக் கைது செய்து நீதிபதியின்முன் ஆஜர் செய்தபோது அவர் இப்பெண்ணை இம்மாதம் 27ம் திகதிவரை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டுள்ளார்

# ஆசிரிய உலகின் வழிகாட்டி ஆசிர்வாதம்'

(அரியாலை)

பட்டமும் பதவியும் ஒருவரைச் சாரும்பொழுது அவரும் அவரது ஒடுபபடும் பெருமை பெறுகின்றனர் ஆனால் அமரர் ஆசீர்வாதம் தமது சேவையின் மூலம்பெற்ற பட்டமும் பதவியும் அவரது உழைபபின் மூலம் உயர்வடைந்துள்ளன. கல்வித்துறையில் நல்லாசிரியராகவும் அவர் பணியாற்றிய பொழுது மாணவருக்கென ஆக்கியளித்த படிமுறைக் கணிதமும், பயிலுந்தமிழும் மாணவர்களின் அறிவு வளர்ச்சியில் முக்கிய இடத்தைப்பெற்றுள்ளன. நல்லாசிரியனாகப் பணியாற்றியதின் மூலம் ஆசிரிய உலகிற்கே வழிகாட்டியாகவும் கலங்கரை விளக்காகவும் அவர் விளங்கினார்."

இவ்வாறு தமிழிசை நாடகக் கலைக்கழகத்தார் நடாத்திய அமரர் மு வி. ஆசீர்வாதப நினைவாஞ்சலிக் கூட்டத்தில் முன்னாள் மாநகரசபை உறுப்பினரும் இளைப்பாறிய ஆசிரியருமான திரு. ஜே. அழகையா பேசுகையில் குறிப்பிட்டார்.

சுண்டிக்குளி கிறீன்பீல்ட் கழக மண்டபத்தில் தமிழிசை நாடகக்கலைக்கழகத் தலைவர் திரு எம். எம். பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்வஞ்சலிக் கூட்டத்தில் கொழும்பு புத்தளை ஆசிரிய பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் திரு. ம. செ. அலெக்சாண்டர் பேசுகையில், "அமரர் ஆசீர்வாதம் வல்லவனாகவும், நல்லவனாகவும், வழிகாட்டியாகவும் வாழ்ந்ததுடன் சிறந்த சமூக சேவையாளனாகவும் பணியாற்றினார் பழமையையும், புதுமையையும் இணைக்கும் பாலமாக விளங்கினார் எல்லா மொழிகளையும் கற்றுணர்ந்த அவர் மேலைத்தேசமொழிகளில் உள்ள கலைகள் தமிழ் மொழியில் இடம்பெறவேண்டும் என்று ஆவல்பட்டார் கலையுலகில் அவர் கொண்ட பற்றினால் ஆங்கில நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியர் எழுதி "அஸ்யூ லைக்கிற்" என்ற ஆங்கில நூலை மொழிபெயர்த்து 'மனம் போல் மாங்கல்யம்' என்ற பெயரில் நாட்டுக்கூத்தாக புத்தகரூபத்தில் வெளியிட்டதுடன் அதனை நாடகமாகவும் மேடையேற்றினார். இவரது பிரிவு கலையுலகிற்கு ஈடுசெய்ய முடியாததாகும்" என்றுகுறிப்பிட்டார்.

வித்துவான் வேல்மாறன், திரு எஸ். பி. ஜீவானந்தம் ஆகியோர் அஞ்சல உரைகள் நிகழ்த்தினர். நினைவு மலரும் வழங்கப்பட்டது.

(அ)

### அந்த மசோதா நிறைவேறியது

புதுடில்லி, டிச 20

சர்ச்சைக்குரிய திருத்த மசோதா ஒன்று இன்று இந்திய லோகசபையின் அங்கீகாரம் பெற்றது.

44-வது அரசியல் சாஸனத் திருத்த மசோதா மிகப்பெரும்பான்மை வாக்குகளால் இன்று லோகசபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கு ஆதரவாக 318 உறுப்பினர்களும எதிர்த்து ஒரு உறுப்பினரும் வாக்களித்தனர்.

### பேரவையில் —

[11ம் பக்கத் தொடர்ச்சி]

டியதுதான்.

விவசாய அமைச்சர்: முன்னைய விவசாய பெருக்கக் குழுக்களின் 54 குழுக்களின் தலைவர்களுக்கு எதிராகவழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 14 பேர் மீது லஞ்சக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. ஒரு கோழியாவது களவெடுத்திருந்தால் தான், முன்னைய அரசில் இப்பதவியை யாரும் வகிக்கமுடியும்.

விவசாய அமைச்சர்: அண்மையில் நடைபெற்ற ஏர்ப்பூட்டுவிழாவில் நான் சண்டி, சப்பாத்து அணிந்திருந்ததை பெரிதுபடுத்தி பிரச்னையாக்கினார்கள். சண்டியை நான் சின்னவயதிலிருந்தே உபயோகித்து வருகின்றேன். காலில் உண்மையிலேயே எனக்குப் புண் இருக்கிறது அதனால் தான் அன்றைய தினமும் வயலில் நடக்கும்போது நான் சப்பாத்து அணிந்திருந்தேன்.

[ம]

# 10,000 அரசியல் கைதிகள் விடுதலை

ஜாகர்த்தா. டிச. 20

1965ம் ஆண்டு இந்தோனேஷியாவில் சிறைவைக்கப்பட்ட அரசியல் கைதிகளில் 10,000 பேர் இன்று விடுதலை செய்யப்பட்டனர்.

1965ல் ஜனாதிபதி சுஹார்ட்டோவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தபோது இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

### திருநெல்வேலி—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாதவிலை நிர்ணயிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

விவசாயத்துக்குத் தேவையானரசாயன உரம் போன்ற போன்ற பொருட்கள் விலை ஏறியிருப்பதைச் சுட்டிக்காட்டிய திரு சிவசிதம்பரம் விவசாயிகளுக்கு நியாயமான நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்

(ம)

### 3 ஆண்டுகளில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றும் கூறினார்.

"10000 பசுமாடுகள் இறக்குமதி செய்யப்படும். இவற்றில் ஒரு பகுதி வடக்குக்கும் அனுப்பிவைக்கப்படும்" என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

[ம]

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The EelanaaduPost Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka